இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (13.03.2024) சென்னை, திருவான்மியூர், மருந்தீஸ்வரர் திருக்கோயிலில் உழவாரப் பணி மேற்கொள்ளும் அடியார்களுக்கு மண்வெட்டி, ஏணி, ஒட்டடை குச்சி, துடைப்பம், தண்ணீர் பீச்சும் இயந்திரம் மற்றும் குழாய்கள் சலவைப் பொருட்கள் / தூய்மைப் பொருட்கள் வழங்கி, உழவாரப் பணிகளை தொடங்கி வைத்தார். உடன் இந்து சமய அறநிலையத்துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், இணை ஆணையர்கள் ச.லட்சுமணன், திருமதி கி.ரேணுகாதேவி, திருக்கோயில் செயல் அலுவலர் ம.சக்திவேல் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

3000 பேர் வேலை வாய்ப்பு பெறுவர்

நீலகிரி மாவட்டத்தில் விரைவில் தொழிற்பூங்கா திறப்பு!

புகைப்படக் கண்காட்சியை திறந்து வைத்து அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேச்சு!

நீலகிரி, மார்ச் 14-

நீலகிரி மாவட்டத்தில். செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் நலத் திட்டங்கள் குறித்த சிறப்பு புகைப்படக் கண்காட்சியினை. சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் திறந்து வைத்து பார்வையிட்டு. 50 பயனாளிகளுக்கு ரூ.1.42 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நீலகிரி மாவட்டம். உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையவளாகத்தில். செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில். தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் நலத் திட்டங்கள் குறித்த சிறப்பு புகைப்பட கண்காட்சியினை. சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்தி ரன் திறந்து வைத்து பார்வையிட்டு. தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்புற வாழ்வாதார இயக்கம். கூட்டுறவுத்துறை. மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை. மாற்றுத்திறனாளிகள் நலத்துறை. வருவாய் மற்றும்பேரிடர் மேலாண்மைத்துறை. மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம். மாவட்ட தொழில் மையம். தோட்டக்கலைத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில்

50 பயனாளிகளுக்கு ரூ.1.42 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மேலும். சுற்றுலாத்துறை அமைச்சரால் திறந்து வைக்கப்பட்ட இந்த சிறப்பு புகைப்படக் கண்காட்சியில் மகளிர் திட்டம். சமூக நலத் துறை. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை. வனத்துறை. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டம். மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம். இசேவை மையம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து கண்காட்சியில் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில். சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்ததாவது :

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு ஆட்சி பொறுப்பேற்றது முதல் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக. மகளிர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில்

புதுமைப் பெண் திட்டம். கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம் ஆகிய திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அதேபோல். மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் மூலம் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் இல்லங்களுக்க சென்று. மருந்து பெட்டகங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

நீலகிரி மாவட்டத்திலுள்ள மக்களுக்கு உயர்சிகிச்சை வழங்கும் வகையில் உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கட்டுமான பணிகள் இறுதிகட்டத்தை எட்டியுள்ளது.

கட்டுமான பணிகள் நிறைவடைந்து. விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளது. உதகை தலைமை மருத்துவமனையை கூடலூர் வட்டத்திற்கு மாற்றப்பட்டு. பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதேபோல குன்னூர் மற்றும் கோத்தகிரி அரசு மருத்துவமனைகளும் புணரமைப்பு செய்யப்பட்டு. பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும். கூட்டுறவுத் துறையின் சார்பில் அனைத்து குடும்ப அட்டைதார்களுக்கும் நியாய விலைக்கடைகள் மூலம் தரமான பொருட்கள் வழங்கப்படுகிறது. சுகாதாரத் துறையின் சார்பில். இன்னுயிHகாப்போம் நம்மைக்காக்கும் 48 திட்டத்தின் மூலம் விபத்தில் சிக்கிய பல்வேறு நபர்கள் பயன்பெற்றுள்ளார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் இருக்கும் இடத்திற்கே அரசு அலுவலர்கள் தங்கி. அவர்களின் குறைகளை கேட்டறிந்து. தீர்வு காண வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட உங்களை தேடி உங்கள் ஊரில் திட்டத்தின்கீழ். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட வட்டத்தை தேர்ந்தெடுத்து. அரசின் நலத்திட்டங்கள். வளர்ச்சிப்பணிகள் குறித்து நேரடியாக ஆய்வு மேற்கொண்டு. அங்குள்ள பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து. நிவர்த்தி செய்யும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும். நமது மாவட்டத்தில். பல்வேறு அரசு பேருந்துகள் சீரமைக்கப்பட்டு. நல்ல நிலையில் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விடியல் திட்டத்தின்கீழ். 118 பேருந்துகளில் மகளிர் கட்டணமில்லாமல் பயணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் அதிகமான மகளிர்கள் பயன் பெற்று வருகிறார்கள். நீலகிரி மாவட்டத்தில் 1.12 இலட்சத்திற்கும் மேற்பட்ட மகளிர்கள் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பெற்று வருகின்றனர். நமது மாவட்டத்தில் 2500 முதல் 3000 நபர்கள் வரை வேலைவாய்ப்பு பெறும் வகையில் தொழிற்பூங்கா அமைக்கப்படவுள்ளது.

மேலும். நமது மாவட்டத்தில் நெடுஞ்சாலைத்துறையின் மூலம் சாலை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளது. இப்புகைப்படக் கண்காட்சியில். முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த திட்டங்களான. முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின்கீழ் அளிக்கும் சிகிச்சை. மக்களை தேடி மருத்துவம். உங்களை தேடி உங்கள் ஊரில். நீங்கள் நலமா. கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம். மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணம். பன்னாட்டு நிறுவனங் களுடன் புதிய தொழில் தொடங்க புரிந்துணர்வு ஒப்பந்தம். முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம். இலவச வீட்டு மனைப்பட்டா வழங்குதல். மகளிர் சுயஉதவிக் குழுவினர்களுக்கு கடனுதவிகள் வழங்கியது. ஊட்டச்சத்து உறுதி செய். முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித் தோட்டம் திட்டம். இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம். விவசாயிகளுக்கு புதிய மின் இணைப்புகள் வழங்கும் திட்டம். கலைஞரின் வரும் முன்காப்போம் திட்டம். நமக்கு நாமே திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் குறித்து புகைப்படங்கள் சிறப்பாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் சாதனைகள் மற்றும் தமிழ்நாடு அரசால் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து அனைத்து தரப்பட்டவர்களும் அறிந்து கொள்ளும் வகையிலும். விழிப்புணர்வு களை ஏற்படுத்தும் வகையிலும் இன்று முதல் தொடர்ந்து ஏழு நாட்கள் இந்த சிறப்பு புகைப்பட கண்காட்சி நடைபெறுகிறது.

நீலகிரி மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பாக அமைக்கப்பட்டிருந்த புகைப்பட கண்காட்சியினை பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் அதிகளவில் பார்வையிட்டு. அரசின் நலத் திட்ட உதவிகளை தெரிந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கா.ராமசந்திரன் தெரிவித்தார்

முன்னதாக. சுற்றுலாத் துறை அமைச்சர். செய்தி மக்கள் தொடர்புத்துறையின் அதிநவீன மின்னணு விளம்பர வாகனத்தின் மூலம் தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் சிறப்புத் திட்டங்கள் விளக்கும் வகையில் திரையிடப்பட்ட குறும்படத்தினை பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து. சுற்றுலாத்துறை அமைச்சர் கலை பண்பாட்டுத்துறையின் சார்பில். ஜவஹர் சிறுவர் மன்ற குழந்தைகளின் வரவேற்பு நடன நிகழ்ச்சியினை பார்வையிட்டார்

இந்நிகழ்ச்சியில். கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக். கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் தயாளன். சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.கல்பனா. திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) காசிநாதன். மாவட்ட தொழில் மைய பொது மேலார் சண்முக சிவா. உதகை நகராட்சித்தலைவர் திருமதி.வாணீஷ்வரி. மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.பிரவீணா தேவி. மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.கீதா. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட அலுவலர் திருமதி. தேவகுமாரி. உதகை ஊராட்சி ஒன்றியத்தலைவ மாயன் (எ) மாதன். செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சையத் முகம்மத். உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) சரண். மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் (பொ) திருமதி.ஷோபனா. உதகை வட்டாட்சியர் சரவணகுமா திட்டக்குழு உறுப்பினர் ஜார்ஜ் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

சென்னை துறைமுகம் சட்டமன்றத் தொகுதி வட்டம் 57 வால்டாக்ஸ் சாலையில் உள்ள பழைய நாடக கொட்டகையில் புதிய சமுதாய நலக்கூடம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டு துவக்கும் விழா நடைபெற்றது. இதனை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மேயர் பிரியா, ஆகியோர் தொடங்கி வைத்தனர். உடன் பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி எஸ்.ராஜசேகர், மண்டல குழு தலைவர் ஸ்ரீராமுலு, கவுன்சிலர் ராஜேஷ் ஜெயின் உள்ளனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள்: காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ. தலைமையில்

மதுரவாயல் தெற்குப் பகுதியில் நல உதவிகள் - பொதுக்கூட்டம்!

கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. - அமைச்சர் எ.வ.வேலு பங்கேற்பு!

சென்னை,மார்ச்.14-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி தி.மு.க. சார்பில் முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 3071 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் கழக அரசின் நிதி நிலை விளக்க மாபெரும் பொதுக் கூட்டம் 12.03.2024 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணியளவில் செட்டியார்அகரம் பிரதான சாலையில் மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் பகுதி கழக செயலாளருமான காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

வளசரவாக்கம் 11வது மண்டலக் குழுத் தலைவர், நொளம்பூர் வே.ராஜன், வில்லிவாக்கம் ஒன்றிய செயலாளர் அயப்பாக்கம் அ.ம. துரைவீரமணி தலைமை பொதுக் குழு உறுப்பினர் இராமாபுரம் வ.செல்வகுமார், எம்.சி. பொதுக்குழு உறுப்பினர் வீர. கனிமொழி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் பகுதி கழக நிர்வாகிகள் பி.எம். செல்வராஜ், வே.மதியழகன், இரா.பால்பாண்டியன், எஸ். பாரதி, எம்.சி. கே.ராஜி, எம்.சி. மாமன்ற உறுப்பினர் ஹேமலதாகணபதி, எம்.சி. வட்ட கழக செயலாளர்கள் எஸ்.ரமேஷ்ராஜ், த.ரமேஷ், அ.மோசஸ், எஸ்.அப்பன்(எ) சத்தியமூர்த்தி, தி.சார்லஸ், ஆ.செல்வம், மூன்லைட் டி.ரவி, (மு.வ.க.செ)

ஆகியோர் வரவேற்புரையாற்றினார்கள்.

கழக பொருளாளர், நாடாளுமன்ற தி.மு.க. குழு தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி., பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர், திருவண்ணாமலை (தெ) மாவட்ட கழக செயலாளர் எ.வ.வேலு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், விருகம்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், எ.எம்.வி..பிரபாகர்ராஜா, மு.மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மகேஷ்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன், காசிமுத்து மாணிக்கம், (மாநில வர்த்தக அணிச் செயலாளர்) எஸ்.பத்மபிரியா, (மாநில துணை செயலாளர், தகவல் தொழில் நுட்ப அணி)

பாலவாக்கம் க.சோமு, தலைமை செயற்குழு உறுப்பினர் வேளச்சேரி பி.மணிமாறன்,எம்.சி.

மாவட்ட கழக நிர்வாகிகள்: எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன்,எம்.சி.

மு.மனோகரன், பா.வாசு கிபாண்டியன், எஸ்.பாஸ்கரன், எம்.சி., வி.ராஜேஷ், மாவட்ட சுற்றுச் சூழல் அணி அமைப்பாளர், அ.விஜயபாலா, மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர், கே..குமரேசன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர், எஸ்.பி.அருள், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர்.

பகுதி - ஒன்றிய கழக செயலாளர்கள்: கே.கண்ணன்,எம்.சி. மு.ராஜா, எம்.சி. எம்.கிருஷ்ணமூர்த்தி, எம்.சி. இரா.துரைராஜ், எம்.சி. எஸ்.வி.ரவிச்சந்திரன், எம்.சி. வி.இ.மதியழகன், எம்.சி. துரைகபிலன், அரிமா சு.சேகர், வி.வெங்கடேசன்

பொதுக்குழு உறுப்பினர்கள்: வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், எம்.சி. சைதை சம்பத், சைதை மா.அன்பரசன், எம்.கே.ஏழுமலை, ப.ரவி, உ. துரைராஜ், மின்னல் கந்தப்பன், எஸ்.ஏ.அரிகிருஷ்ணன், எஸ்.டி.தங்கராஜன், ரா.பால சுந்தரம், பி.எஸ்.முருகேசன், எஸ்.டி.தங்கராஜ், தா.பஷீர், டி,ஜே.பாஸ்கர்

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: வே. ஆனந்தன், ஏ.கே.ஆனந்த், எஸ்.தீபக், எம்.விநாயக மூர்த்தி, சைதை சாதிக், கழக த.ரமேஷ்,தரமணி ஜெகதீசன், பா.அருண்குமார், D. கனிமொழி, சி.பரிமேலழகன், சி.ரமேஷ், நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், ஜி.வரதன், மருத்துவர் இரா. மு.முபாரக், எம்.எஸ்.ஹரிபாபு, எம்.ஆர்.சசிக்குமார், எஸ்.முகேஷ், நிஷாசையத், எஸ்.பாலமுருகன், ச.சங்கர்கணேஷ், எம்.சி. கெ.ரவி,

மதுரவாயல் தெற்கு - வடக்கு மாமன்ற உறுப்பினர்கள்: செல்விரமேஷ், எம்.சி. சாந்திஇராமலிங்கம், எம்.சி. ஆ.மாலினி, எம்.சி. எம்.இ.ஸ்டாலின், எம்.சி. ரமணிமாதவன், எம்.சி.

மதுரவாயல் வடக்கு பகுதி, வில்லிவாக்கம் ஒன்றிய கழக நிர்வாகிகள் : தீ.பாலாஜி, எம்.ஏ. செந்தில் சுரேஷ், ம.உதயகுமார், ப.கிரிஜா, என்.ஜெயச்சந்திரன், எ.எம்.யுவராஜா, ஆர். கௌரிசங்கர், என்.ரவி, கே.எஸ்.மாறன்குமார், கே.சங்கர், கு.சதீஷ்குமார், இரா.வினோத், என்.ஜெய சுதா, எம்.ஜி.சாமிநாதன்

மதுரவாயல் வடக்கு வட்ட கழக செயலாளர்கள்: எஸ்.ஜி.மாதவன், எம்.கே.பி. அண்ணாதாசன், எம்.எம். ஜெயரத்தினம், சி.சசிகுமார், ப.ஆலன், எம்.ரூபன்

மாவட்ட பிரதிநிதிகள்: எம்.எல்.நாதன், வி.விஜயன் ஆர்.சேகர், எஸ்.ரவி, எ.டி.எத்திராஜ், ஜி.ராமகிருஷ்ணன், எம்.கே.கமலக்கண்ணன், கோ.இராமலிங்கம், ஆர்.கர்ணல், க.பிருந்தாவனன், ஆர். ரசூல்தீன், ஆர்.ராகேஷ், ச. எழில்அரசு, கே.ராஜ்குமார், கே.முரளி, பி.சங்கர், எம். ஆர்.சதீஷ், ஜி.குப்புசாமி, எம்.கே.ஞானசேகரன்

மதுரவாயல் தெற்குப் பகுதி அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள்: சி.நல்லதம்பி, ஜி.மன்மதராஜ், மா.பா.சித்ராலயம், ஜே.ஏ.துரை, நா.அப்துல்கபூர், லயன்டி.பாலாஜி, ஆர். கருணாகரன், எஸ்.ஷகிலா, சி.டேவிட்ராஜ், செஞ்சி கார்த்திக், கே.சரவணன், எல்.டி.என்.சரவணன், ஆர்.டி. பாஸ்கரன். பி.மதிவா ணன், பி.மோகன், ஏ.ராகேஷ், பி. கே.சண்முகம், எஸ்.பரணி, கே.தெய்வமணி, வி.திலகவதி, பி.பிரியா

மதுரவாயல் வடக்குப் பகுதி அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள்: ச.தினகரன், எஸ்.கிருஷ்ணமூர்த்தி, நா.செம்பு லிங்கம், பா.வாசு, பி.புஷ்பராஜ், இ.ரஜினி(எ) சுகுமார், கு.கோவிந்தராஜ், எம். ஜனார்த்தனன், பி.ஜெய பிரகாஷ், ஜே.பி.ஜெயபிரகாஷ், வெ.ஏழுமலை, சி.ஆர்.இன்பராஜ் , வாணிகுமரேசன், ஆர்.தாமரைச்செல்வன், எஸ்.ஜி.வெங்கடேசன், மீசை செல்வராஜ், கு.ராஜா, சுந்தரிஆதிகேசவன்

வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள்: க.வரதன், இ.தேவராஜ், ஏ.எம்.பர்மன், கே.செந்தில் குமார், இ.நவீன்குமார், க. துரைராஜ், வி.அறிவழகன், ஜே.எம்.ரெனால்டு, ஏ.எம். குமரராஜா, ஏ.பி.ஆர்.வேலாயுதம், ஜெ.வெங்கடேசன், கே.ரமேஷ், டி.செல்வம், ஆர். பிரபாகரன், இ.சேகர், ஏ.செல்வம், டி.ஐசக்நேசக்குமார், ஆர்.பூங்கோதை, ஏ. பிரபாவதி

மதுரவாயல் தெற்குப் பகுதி அணிகளின் அமைப்பாளர்கள்: ஆர்.சுரேஷ்பாபு, எம்.மதன்ராஜ், அ.கவுஸ் பாஷா, ஏ.பிரசாந்த், அ. லாவன்யா,ஜி.பிரவின்குமார்,

மதுரவாயல் வடக்குப் பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்: பி.நவராஜ்,த.தங்கபிரகாசம், கு.குணசேகரன், பி.பார்த்திபன், அமுதாராமச்சந்திரன், என்.ராஜ்மகள், பொன்.பச்சையப்பன், மு.ராஜலட்சுமி, மீனாகணேசன், பொன்மணிசாந்தா நல்லதம்பி, அஞ்சுகம்ரவி, பா.சிவசங்கர், எஸ். என்.பாலாஜி, ஏ.தேன்மொழி மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

சி.சுந்தர், 150வது வட்ட கழக செயலாளர், மாவட்ட பிரதிநிதிகள் க.கைலாசம், இரா.ராஜேந்திரன் ஆகியோர் நன்றியுரையாற்றினார்கள்.

மயிலை ஆர்.பாலு தலைமை! கவிஞர் காசி முத்துமாணிக்கம் முன்னிலையில்

கழக வர்த்தக அணி சார்பில்-காக்கும் கரங்கள் இல்லத்தில் அறுசுவை உணவு!

மயிலை த.வேலு,தமிழச்சி தங்கபாண்டியன்,ஜெ.கருணாநிதி வழங்குகின்றனர்!

சென்னை மார்ச் 14

சென்னை தென்மேற்கு மாவட்டம், 'எல்லோருக்கும் எல்லாம்'தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, மாவட்ட வர்த்தக அணி சார்பில், காக்கும் கரங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி (இன்று 14.3.2024 வியாழக்கிழமை) மதியம் 12 மணி அளவில் காக்கும் கரங்கள், இல்லம் சாந்தோம் நெடுஞ்சாலையில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு தலைமை ஏற்கிறார்.

கழக வர்த்தக அணி செயலாளர் கவிஞர் காசி முத்து மாணிக்கம், கோ. கண்ணன், வி.வெற்றிவேல், ஏ.தாஸ், மா.பா.அன்பு துரை, பார்த்திபன், பா. பொன்னுசாமி, டி.ராஜவேலு, சி. கிருஷ்ண மூர்த்தி, ராஜாசுரேஷ்குமார், அ.நாகராஜன், மு.இ. ஏழுமலை, மூ.ராஜேந்திரன், ஆர்.ரேவதி எம்.சி, கீதா முரளி எம்.சி, விமலா கிருஷ்ணமூர்த்தி எம்.சி.ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

த.சீனிவாசன், க.மதியழகன், லயன் சி.எஸ். நந்தகுமார், ஆர். கோவிந்தராஜன், மாயா என்கிற முருக ராஜா, ஸ்ரீ கணேஷ், வெ.கனிமொழி, ஏ.பாஸ்கர், செ.முருகன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ, தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, பகுதிச் செயலாளர்கள் எஸ். முரளி, நந்தனம் கி.மதி எம்.சி, கே.ஏழுமலை எம்.சி ஆகியோர் பங்கேற்று காக்கும் கரங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்களுக்கு அறுசுவை உணவு வழங்குகின்றனர்.

இதில் மாநில, மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் கலந்து கொள்கின்றனர்.

வி.முருகன் தலைமை! க.ஜெயராமன்-அ.முருகன் முன்னிலை!

பெரம்பூர் தெற்கு பகுதி- 46 வது வட்டத்தில் மாபெரும் பொதுக்கூட்டம்!

ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை! ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.- கலாநிதி வீராசாமி எம்.பி. பங்கேற்பு!

சென்னை, மார்ச், 14

சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் தெற்குப் பகுதி, 46 வது வட்டக் கழகம் சார்பில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா கழக அரசின் சாதனை விளக்க மாபெரும் பொதுக் கூட்டம் இன்று (14.3.2024- வியாழக்கிழமை) மாலை 6 மணிக்கு சென்னை, வியாசர்பாடி, ரத்தினம் தெரு (ஏரிக்கரை) வில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு வட்டச் செயலாளர் வி.முருகன் தலைமை வகிக்கிறார். பகுதிச் செயலாளர்கள் க.ஜெயராமன், அ.முருகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வி.வேதா,சி.ஆனந்தி எம்.சி., வை.கௌதமன், வெ.இன்பரசன், க.ஜெயராஜ், கதிரவன்மணி, பி.ஆனந்தி, டி.டி. மணிமாறன், ஜி.ஜெயக்குமார், ச.ராஜன், ஆர்.ரகு, பி. கிருஷ்ண மூர்த்தி, இ.கர்ணா, கே.பிரசாத், எம்.ஜெயகிருஷ்ணன், இ.மணிகண்டன், ஜி. கணேசன், எஸ்.சங்கீதா, ஜி. மோகன், ஒய்.மகிமைராஜ், பி. ராதாகிருஷ்ணன், எம். அருணன், எஸ்.கார்த்திக் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

இக் கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ், பாரதி, மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ.ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., பெரம்பூர் தொகுதி தேர்தல் பார்வையாளர் வழக்கறிஞர் ஏ.சரவணன், இரா.கருணாநிதி, இரா.நரேந்திரன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், வி.தயாளன், ஏ.ஆர். ஆர்.மலைச்சாமி, ந.சர்ப ஜெயா தாஸ், ஏ.தமிழ்ச்செல்வன், ப.மதிவாணன், டி..கமலக்கண்ணன், க.அமுல், க.சர்மிளாகாந்தி, எம்.சி., க.பாபு, த.ஆறு முகம், ஆர்.எஸ்.மனோகரன், ஜி.மாரிமுத்து உள்பட மாவட்ட அணிகளின்அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள்,பெரம்பூர் தொகுதி- தெற்கு, வடக்கு அணிகளின் அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர். 46 வது வட்டக் கழக துணைச் செயலாளர் ஆர்.சீதா நன்றி கூறுகிறார்.

சென்னை தெற்கு மாவட்ட முன்னாள் மகளிர் அணி அமைப்பாளர்

அனுராதா இளங்கோவனின் கணவர் மறைவு!

சென்னை, மார்ச் 14-

சென்னை தெற்கு மாவட்டக் கழக முன்னாள் மகளிர் அணி அமைப்பாளர் திருமதி. அனுராதா இளங்கோவனின் கணவர் இளங்கோவன் நாகராஜன் நேற்று இயற்கை யெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இது பற்றிய விபரம் வருமாறு:

சென்னை தெற்கு மாவட்டக் கழக முன்னாள் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திருமதி. அனுராதா இளங்கோவன் (திருவாரூர்) அவர்களின் கணவர் இளங்கோவன் நாகராஜன் (திருவையாறு) 12.3.2024 அன்று இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறோம்.

அன்னாரது இறுதி ஊர்வலம் இன்று (14-3-2024) காலை 11 மணி'க்கு எச்.80, ஜி.1, முதலாவது Seaward சாலை, வால்மீகி நகர், திருவான்மியூர் என்ற முகவரியில் நடைபெறுகிறது.

கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டம் விவசாய அணி சார்பில் பூந்தமல்லி ஒன்றியம் பாணவேடு தோட்டத்தில் உள்ள அரசு பள்ளியில் நலத்திட்டம் உதவி வழங்கும் நிகழ்ச்சி ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ் தலைமையில் மாவட்ட அமைப்பாளர் டி.குமரேசன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட செயலாளருமான ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ மாணவர்களுக்கு நோட் புத்தகம் எழுதுகோல் மற்றும் 20 மாற்றுத்திறனாளிகள் முதியோர்களுக்கு நிதி உதவி விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கினார். உடன் பூந்தமல்லி எம்.எல்.ஏ ஆ.கிருஷ்ணசாமி, மாநில விவசாய துணைச் செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன், ஜி.ஆர்.திருமலை, ஜி.நாராயணபிரசாத், பொன்.விஜயன், எம்.முத்துதமிழ்செல்வன், வி.குமார், க.ஸ்ரீதரன், அண்ணாமலை, ஏ.ஜனார்த்தனன், கே.எஸ்.புகழேந்தி, ஏ.ஆர்.பாஸ்கர், பிரபாகரன், வி.பி.பிரகாஷ், ஏஜி.ரவி, என்.சண்முகம், வி.தணிகாசலம், எம்.ராம்பாபு, டி.திருமலைராஜ், சாந்திஜனார்த்தனன், திருலோகசுந்தர், கேசவன், சாய்மோகன், துரைமுருகன், சுகுமார், பரிமேலழகன், ஜுனைத், டேனியல், செம்ப் சேகர், ஜி.பாபு, எச்.சஞ்சய், கே.சுந்தர், சசிகலா, அஞ்சலை, விமல் குமார், பி.பி.தினகர், விஸ்வநாதன் உள்பட பலர் உள்ளனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி மேற்கு ஒன்றியம், ஏடூர் ஊராட்சி கும்புளி கூட்டுச்சாலையில் மாவட்டச் துணைச் செயலாளர் எம்.எல்.ரவி ஏற்பாட்டில் 60 அடி கொடி கம்பத்தில் கழகத் தல